**லங்கா எலக்ரிசிற்ரி கம்பனி (பிறைவேட்) லிமிட்டட் ("கம்பனி") மற்றும் அதன் துணைக் கம்பனிகளின் ("தொகுதி") - 2020**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

லங்கா எலக்ரிசிற்ரி கம்பனி (பிறைவேட்) லிமிட்டட் ("கம்பனி") மற்றும் அதன் துணைக் கம்பனிகளின் ("தொகுதி") 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையே நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து கம்பனி மற்றும் தொகுதி 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று

வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கைஎடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லாவேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றை விடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் கம்பனியின் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகைசபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் காலவரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்

## 1.5 கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக்கட்டுப்பாடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஏகல களஞ்சியம், வஸ்கடுவ களஞ்சியம், கோட்டே கிளை, நுகேகொட கிளை மற்றும் நீர்கொழும்பு கிளை ஆகியவற்றின் சரிபார்கும் தாள்களுக்கும் பொது பேரேட்டின் தொகைக்குமிடையே வேறுபாடுகள் முறையே ரூபா. 841,799, ரூபா. 763,212, ரூபா. 2,149,068, ரூபா. 1,527,221 மற்றும் 547,038 ஆக காணப்பட்டன. | இருப்புக்கள் WACCஇல் மதிப்பிடப்படுகின்றன. பொதுப் பேரேட்டில் இருப்பிற்காக ஏற்படும் அனைத்து கிரயங்களும் உள்ளடங்குகின்றன. சரிபார்கும் தாள்களின் படி மீதிக்கும் பேரேட்டின் படி மீதிக்கும் இடையே வேறுபாடு ஏற்பட்டதற்கு இதுவே முக்கிய காரணமாக காணப்படுகின்றது. | ஏதேனும் வேறுபாடுகள் இருந்தால் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் |

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | வாடிக்கையாளர்களிடமிருந்து வசூலிக்கப்படும் மீற்றர் சோதனைக் கட்டணங்கள், வாடிக்கையாளர்கள் செலுத்தும் புள்ளியில் வருமானமாக அங்கீகரிக்கப்பட்டு, அந்தத் தொகை ஏனைய தொழிற்பாட்டு வருமானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலும், மீற்றர் சோதனையில் பிழைகள் கண்டறியப்பட்டால், வாடிக்கையாளரிடமிருந்து வசூலிக்கப்படும் கட்டணம் மீளப்பெறப்பட வேண்டும். இருப்பினும், மீற்றர் சோதனைக் கட்டணங்கள் மூலம் கிடைக்கும் வருமானமாக அங்கீகரிக்கப்பட்ட வருவாய், SLFRS 15 இன் பந்தி 31 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கு இணங்கவில்லை. | கருத்துரையுடன் உடன்பட்டார். மீற்றரிலுள்ள குறைபாட்டை கண்டறிந்து வாடிக்கையாளருக்கு பணத்தைத் திரும்பப் பெறுவதற்கான நிகழ்தகவு மிகக்குறைவு. எவ்வாறாயினும், இதை மேலும், பகுப்பாய்வு செய்வோம் மற்றும் மொத்த மீள்நிதித் தொகை மூலப்பொருட்களாக இருந்தால் 2021 இலிருந்து பொது பேரேட்டில் மாற்றங்களைச் செய்ய ஏற்பாடு செய்வோம். | கணக்கீட்டு நியமங்களின் தேவைகளுடன் இணங்கப்பட வேண்டும். |
| (ஆ) | LKAS 2 இன் பிரிவு 9 இன் பிரகாரம், இருப்புக்கள் கிரயத்தில் அல்லது தேறிய நிகர பெறுமதியில் குறைந்த பெறுமதியில் அளவிடப்பட்டது. இருப்பினும், பங்கு மதிப்பீட்டிற்கான தேறிய நிகரப் பெறுமதியினை கம்பனி கருத்தில் கொள்ளவில்லை. | அனைத்து இருப்புக்களின் உருப்படிகள் கொள்வனவு செய்யப்பட்டது. திறந்த சந்தையில் மற்றும் விலைப்பட்டியல் தகவல்கள் உடனடியாக கிடைக்கக்கூடியதாக உள்ளது. இவ் உருப்படிகள் அழியாதவையாகவும் மற்றும் கைத்தொழில் துறை இயல்புடையதாகவும் காணப்படுகின்றது. எனவே இவ் உருப்படிகளின் இருப்புக்கள் தேறிய | கணக்கீட்டு நியமங்களின் தேவைகளுடன் இணங்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பெறுமதியிலும் கூடுதலாக கிரயம் காணப்படுவதாக முகாமைத்துவம் நம்புகின்றது. மேலும், மெதுவாக விற்பனையாகும் உருப்படிகளுக்கு ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளது. இதனால் தேறிய பெறுமதி நட்டத்தை ஈடுசெய்யயலாம். | |
| (இ) | LECO இன் நிகழத்தக்க பொறுப்பு தொடர்பாக சட்ட மற்றும் நிர்வாக முகாமையாளரால் 29 ஏப்ரல் 2021 ஆம் திகதியிட்ட LO/GEN/13 இலக்க கடிதத்தின்படி, கம்பனிக்கு எதிராக ரூபா. 11,253,884 தொகையுடன் மூன்று சட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் கம்பனிக்கு சாதகமாக தீர்மானம் வருவதற்கான நிகழ்தகவு குறைவாகவே காணப்பட்டமையானது அவதானிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றில் LKAS 37 இன் படி, நிகழத்தக்க பொறுப்பு தொடர்பான வெளிப்படுததல்களை கம்பனியால் செய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்துரையுடன் ஒப்புக்கொண்டார் மற்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமங்களின் தேவைகளுடன் இணங்கப்பட வேண்டும். |
| (ஈ) | LKAS 1 இல் பந்தி 32 இன் படி, நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல், கம்பனியொன்றில் SLFRS இனால் தேவைப்படுகளற்ற அல்லது அனுமதிக்கப்படாவிட்டால், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் அல்லது வருமானம் மற்றும் செலவுகளை ஈடுசெய்யப்படலாகாது. எவ்வாறாயினும், வழங்குனர்களிடமிருந்து தாமதக் கட்டணங்கள் ரூபா. 64,314,868 தொகையானது மீளாய்வாண்டில் தொழிற்பாட்டுச் செலவினத்திற்கு எதிராக ஈடுசெய்யப்பட்டது. | தற்போதைய நடைமுறையின்படி, பொருட்களை வழங்குவதில் வழங்குனர்களின் தாமதத்திற்கு விதிக்கப்படும் அபராதக் கட்டணம் ப்ரோன்டோ ஈஆர்பி (ERP) முறைமையிலுள்ள கொள்வனவு வேறுபாடுகள் கணக்கில் பதிவு செய்யப்படுகிறது. எதிர்காலத்தில் தலைப்பிடப்பட்ட கட்டணம் அவ்வப்போது பிரித்தெடுக்கப்படும், மற்றும் கொள்வனவு கிரயத்திற்கு பதிலாக ஏனைய வருமானத்தினால் ஈடுசெய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படும். | கணக்கீட்டு நியமங்களின் தேவைகளுடன் இணங்கப்பட வேண்டும். |
| (உ) | பட்டியலிடல் முறைமையில் உள்ளடங்கிய மீளாய்வாண்டின் வியாபாரக் கடன்பட்டோருக்கு எதிராக வாடிக்கையாளர்களின் செலவு நிலுவைகள் ரூபா.9,174,474 பெறுமதியினை கம்பனி ஈடுசெய்துள்ளமையானது அவதானிக்கப்பட்டது. மேலும், இச் செலவு மீதிகள் அனைத்தும் அதிக கட்டணமாக செலுத்தப்பட்ட மின்சாரக் கட்டணங்களில்லை, அவற்றில் பெரும்பாலானவை சூரிய மின்சக்தி கடன் வைத்திருப்பவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் கொடுப்பனவுகளாகும். | நிதிநிதிக்கூற்றில் கடன் நிலுவைகளை தனித்தனியாகக் காட்டுவது சாத்தியமற்றது. செலவு நிலுவைகளின் பெறுமதி கடன்பட்டோரின் மொத்த பெறுமதியுடன் ஒப்பிடுகையில் பொருண்மையின்மை. சூரியக்கலன் கடன்கள் நுகர்வோருக்கு வெவ்வேறு திகதிகளில் கடனை செலுத்துகின்றனர். எனவே, பட்டியலில் முறைமை இதை அங்கீகரிக்க முடியவில்லை. இந்த குறிப்பிட்ட திகதிகளுக்குப் பிறகு கொடுப்பனவு முறையை இணைக்க | கணக்கீட்டு நியமங்களின் தேவைகளுடன் இணங்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கம்பனியின் பட்டியலிடல் முறைமையிலிருந்து உருவாக்கப்பட்ட கடன் தீர்வு அறிக்கையின் அடிப்படையில் சேகரிக்கப்பட்ட சூரியக்கலன் கடன் தவணைகளை தேசிய சேமிப்பு வங்கிக்கு மாற்றுகின்றது. சூரியக்கலன் கடன் தவணைகள் பட்டியலிடல் முறைமையில் சரியான புதுப்பிக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இதன் விளைவாக, மேற்கூறிய கடன் தீர்வு அறிக்கை உன்மையானதகாக காணப்படவில்லை. இதனால், வசூலிக்கப்பட்ட தவணையை வங்கிக்கு மாற்றுவதில் தாமதம் ஏற்பட்டது. | படிப்படியாக நடவடிக்கை எடுப்போம். எவ்வாறாயினும், கடன் நிலுவைகளை அடையாளம் காணவும் மற்றும் NSB இற்கு பணம் செலுத்தவும் பட்டியல் முறைமையிலிருந்து பல அறிக்கைகளை அவ்வப்போது உருவாக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். | |
| (ஊ) | மீளாய்வாண்டில் அட்டுறு செலவுகளுக்குள்ளடக்கப்பட்ட சில்லறைக் கடன்கொடுத்தோருக்கு எதிராக முற்பணக்கொடுப்பனவுகள் ரூபா. 9,385,853 தொகையானது பதிவளிப்பு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | • மூலப்பொருள் கடன்கொடுத்தோர் - பொருள் இருப்புக்கான தொடர்புடைய LC பெறுமதி 31.12.2020 இல் கணினியில் பதியப்பட்டிருக்கவில்லை. எனவே கடன்கொடுத்தோரில் வரவு மீதியைக் காட்டியது.<br>▪ நிர்வாக பொதுக் கடன்கொடுத்தோர் மற்றும் பராமரிப்பு கடன்கொடுத்தோர் - IT பிரிவு அவர்களின் முடிவில் இருந்து விடய முறைமையின் பதிவுகளில் திருத்தம் செய்வதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. | கணக்கீட்டு நியமங்களின் தேவைகளுடன் இணங்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| LKAS 16 இல் பந்தி 51 இன் படி, ஒரு சொத்தின் எஞ்சிய பெறுமதி மற்றும் பயனுள்ள ஆயுள் ஆகியவை குறைந்தபட்சம் ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் மீளாய்வு செய்யப்பட வேண்டும், மேலும் எதிர்பார்ப்புகள் முன்னைய மதிப்பீடுகளிலிருந்து வேறுபட்டால், அவ் மாற்றம் கணக்குகளின் மதிப்பீடு மாற்றமாகக் கணக்கிடப்படும். LKAS 8 கணக்கீட்டு கொள்கைகளுக்கு இணங்க கணக்கியல் மதிப்பீடுகள் மற்றும் பிழைகள் மாற்றப்பட்டன. இருப்பினும், 31 திசெம்பர் 2020 இன் கம்பனி நிலையான சொத்துகள் பதிவேட்டின்படி, முழுமையாக | முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட பல பயன்படுத்தக்கூடிய சொத்துக்கள் காணப்படுகின்றன எனும் கருத்துடன் உடன்படுகின்றோம். இவ் விடயத்தைத் மீளாய்வு செய்வோம்/ஆராய்வோம், தேவைப்பட்டால், தேவையான மாற்றங்களைச் செய்வோம். | கணக்கீட்டு நியமங்களின் தேவைகளுடன் இணங்கப்பட வேண்டும்.. |

பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட சொத்துக்கள் பெறுமதி ரூபா.9,206,401,000 ஆனது காணப்பட்டதுடன் அவற்றில் சில இற்றைவரை பயன்பாட்டில் உள்ளன.

### 1.5.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பயன்பாட்டு சொத்துக்களின் உரிமையின் தேய்மானம் ரூபா.48,719,696 மீளாய்வாண்டின் இறுதியில் இருப்பு மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்தன. | RoU சொத்துகள் தேய்மானம் தொடர்பான கணக்குகளின் உள்ளீடுகளுடன் தொடர்புடைய G/L கணக்குகளில் சரியாக பதியப்பட்டிருந்தன. இருப்பினும் நிதிக்கூற்றுக்களை கைமுறையாக தயாரிக்கும் போது, இவ் GL குறியீடுகள் இருப்பு மீதியில் தவறாக பதியப்பட்டிருந்தன. இவ் பிழையை 2021 இல் திருத்தம் செய்வோம். | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு முறையாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பொதுப் பேரேட்டின் படி, 31 திசெம்பர் 2020 தலைமை அலுவலகம் மற்றும் 07 கிளைகள் தொடர்பான மூலதனப் வேலைகளின் செயன்முறை மீதி ரூபா.743,219,454 தொகையாக இருந்தது, மேலும் செயல்பாட்டில் உள்ள மூலதன வேலைகளுக்கு வழங்கப்பட்ட அட்டவணையின்படி அத் தொகை ரூபா.612,894,657ஆக காணப்பட்டது. அதன்படி, ரூபா. 130,324,797 வேறுபாடானது அவதானிக்கப்பட்டது. | நுகேகொட மற்றும் நீர்கொழும்பு கிளைகள் - 2016 இல் ப்ரோன்டோ முறைமையில் முன்னைய பதிப்பிலிருந்து சில பதிவுகள் மாற்றப்பட்டன. சில வேலை கிரய முறைமையில் சில வேலைக்கான செலவுப் பதிவுகள் மீண்டும் பதியப்பட்டமை கண்டறியப்பட்டது. இவையே இவ் இடைவெளிக்கு காரணமாக இருக்கலாம்.<br>களுத்துறை கட்டிடம் – ரூபா.751,837 - இக் கட்டிடம் நிறைவேற்றப்பட்டு மற்றும் பயன்படுத்தப்படுகின்றது. 2020 ஆம் ஆண்டில் இக் கட்டிடம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு, மதிப்பீட்டுகளை சரிசெய்யப்பட்டது. இவ் G/L கணக்கில் மீதமுள்ள மீதியாகவுள்ளன. காலி, H/O கட்டிடத்திற்கான அட்டவணைகள் ரூபா.20,460,697 மற்றும் H/O கட்டிடத்திற்கான தொகை ரூபா. 6,133,274 தொகையானது பட்டியலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு முறையாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 31 திசெம்பர் 2020 இல் நுகேகொட கிளையில் ரூபா.5,997,445 தொகையானது வைப்பிலிடப்பட்டதுடன் நிதிக்கூற்றில் வங்கி மேலதிகப்பற்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது. | கிளைகளுக்கு இடையேயான கொடுக்கல் வாங்கல்கள் (கியோஸ்க் இயந்திரம் மூலம் சேகரிக்கப்பட்ட பணம்) சரியாக புதுப்பிக்கப்படாததால் ஏற்பட்டது. மார்ச் 2021 இல் கணக்குப் புத்தகங்களில் சரி செய்யப்பட்டது. | கொடுக்கல் வாங்கல்கள் சரியாக பதிவு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மக்கள் வங்கியில் ஒன்பது கால வைப்புத்தொகை மற்றும் தேசிய சேமிப்பு வங்கியில் நிலையான வைப்புத்தொகை தொடர்பான வட்டி வருமானம் மீளாய்வாண்டில் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் படி, முதலீட்டு பெறுமதி அண்ணளவாக ரூபா. 136,806,661 இனால் குறைவடைந்திருந்ததுடன் வட்டி வருமானம் அண்ணளவாக ரூபா. 67,972,005 இனால் குறைவடைந்து காணப்பட்டது. | 2021 ஆம் ஆண்டில் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்வோம். மற்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. | முதலீட்டின் மீதான வட்டி வருமானம் சரியாக பதிவு செய்யப்பட வேண்டும். |
| (உ) | பயன்பாட்டு உரிமைச் சொத்துகளின் மீதான பெறுமானத் தேய்வு கம்பனியில் தவறாகக் கணிப்பிடப்பட்டிருந்தன. இதன் விளைவாக, ஒவ்வொரு பயன்பாட்டு உரிமைச் சொத்திலிருந்தும் ஒரு மாதத்திற்கான பெறுமானத்தேய்வு அதிகமாக காட்டப்பட்டிருந்தன. | குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் 2021 இல் சீர்செய்யப்படும். | சொத்துகளின் பயன்பாட்டு உரிமையின் தேய்மானத்தை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | வருமானக் கூற்றிலிருந்து கழிக்கப்பட்ட பணிக்கொடைக்கான ஏற்பாடு ரூபா.188,775,000க்கு சமமாக இருந்தது. எவ்வாறாயினும், காசுப்பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போது, கம்பனி ரூபா. 378,219,000 பணிக்கொடை ஏற்பாட்டில் சீராக்கப்பட்டிருந்தன. | கருத்துடன் உடன்படுகின்றோம். ஆதனம், பொறி, இயந்திர மற்றும் உபகரணங்கள் தொடர்பான மீள் சீராக்கம் செய்யவதற்கு சரிசெய்யப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும். | நிதிக்கூற்றுக்களின்நியாயமான முறையில் தயாரித்து சமர்ப்பிக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 1.5.5 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது பதிவுகள்

| உருப்படி | நிதிக்கூற்றின் படி | தொடர்புடைய பதிவேட்டின் படி | வேறுபாடுகள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | | |
| கடன்பட்டோர் மீதி | 7,188,825,245 | 7,175,276,672 | 13,548,574 | கருத்துரை அவதானிக்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டில் ப்ரோன்டோ (PRONTO) முறைமையில் தொழில்நுட்ப | வேறுபாடுகளை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | பிரச்சினைகள் காரணமாக இந்த முறைமைகள் மாற்றப்பட வேண்டி ஏற்றபட்டது. உண்மையான கடன்பட்டோர் இல்லாததினால் அவற்றை முறைமையிலிருந்து நீக்கிவோம் மற்றும் பதிவளிப்புக்கள் மேற்கொள்வோம். |

**1.5.6 ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் ஏனைய விரிவான வருமானக் கூற்றுமற்றும் இலாப மற்றும் நட்ட ஒருங்கிணைந்த கூற்றுகளில் அன்றி LECO கம்பனியின் வருமான வரி செலவினத் தொகை ரூபா.6,092,227 ஆனது சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, கட்டுப்படுத்தாத வட்டி மற்றும் தேறிய வருவாய் முறையே ரூபா.1,827,668 மற்றும் ரூபா. 4,264,559 தொகையினால் அதிகரித்துக் காணப்பட்டது. | கருத்துடன் உடன்பட்டார். 2021 ஆம் ஆண்டில் இச் சரிசெய்தலை மீண்டும் செயற்படுத்துவோம். | நிதிக்கூற்றுக்களை சரியாக தயாரிப்பதில் போதுமான கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | ஒருங்கிணைந்த காசுப்பாய்ச்சல் கூற்றில் லங்கா எலக்ரிசிற்றி கம்பனியினால் வருமானவரி செலுத்துவதை விட தொகுதியினால் செலுத்தப்படும் வருமான வரி குறைவாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | ஏனைய செலுத்தப்பட வேண்டிய கணக்குகளிலிருந்து இவை சரிசெய்யப்படும் என குறிப்பிடப்பட்டது. | ஒருங்கிணைந்த காசுப்பாய்ச்சல் கூற்றுக்களை துல்லியமாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.7 கணக்காய்விற்கு ஆவணச்சான்றுகள் கிடைக்காமை**

| | உருப்படி | தோகை ரூபா. | சான்றுகளின்மை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | சூரிய மின்சக்தி கடன் திட்டம் | | 13 பெப்ரவரி 2017 ஆம் திகதியில் இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவுடனான சந்திப்பின் போது ஒப்புக்கொள்ளப்பட்டு கம்பனியினால் தேறிய | PUCSL மற்றும் எரிசக்தி அமைச்சகத்தின் அறிவுறுத்தலின் படி CEB பரிமாற்றத்திற்கான விலைப்பட்டியல் செய்துள்ளதுடன் அவற்றின் விலை ரூபா.22 மற்றும் பெற | பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுடன் கூட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட தேவைகளுக்கு இணங்கப்பட வேண்டும். இணங்காவிட்டால் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கணக்கு மற்றும் தேறிய கூட்டு முறையைப் பயன்படுத்தி மின்சாரம் வாங்குவதற்கான நட்ட சீராக்க்கல் முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தன. | வேண்டியதாக காட்டப்பட்டுள்ளது. ஆனால் பெறப்படாத விநியோக உரிமதாரருக்கு CEB மீண்டும் விலைப்பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும். எனவே நட்ட கணிப்பீட்டு அறிக்கையை தயாரிக்கமுடியவில்லை. ஆனால், இந்த பிரச்சனை சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன் மற்றும் அமைச்சகத்திற்கு அறிவிக்க அறிவுறுத்தப்பட்டது. | தொடர்புடைய தரப்பினரிடமிருந்து அனுமதி பெறப்பட வேண்டும். |
| (ஆ) பங்குகளில் முதலீடு | 5,000,000 | லங்கா பிறோட் பிறாட் நெட்வோக் (பிறைவேட்) லிமிட்டட்டில் முதலீடு செய்யப்பட்ட சாதாரண பங்குகளின் பங்குச் சான்றிதழ் ரூபா.5 மில்லியனாகும். | கம்பனியிடமிருந்து பல முறை கோரிக்கை விடுத்தாலும், இவ் முதலீட்டிற்கான பங்குச் சான்றிதழைப் பெறவில்லை. இம் நிலுவையை மீட்பதற்கு LECO சட்ட ஆலோசனைகாக சட்டமா அதிபர் திணைக்களத்திடம் சென்றிருந்தன. | முதலீட்டு உரிமையைச் சரிபார்ப்பதற்கு பங்குச் சான்றிதழ்கள் பராமரிக்கப்பட வேண்டும். |
| (இ) முதலீடு | | கம்பனியினால் லங்கா பிறோட் பிறாட் நெட்வோக் (பிறைவேட்) லிமிட்டட் மற்றும் லெகோ புறொஜெக்டஸ் (பிறைவேட்) லிமிட்டட் ஆகியவற்றில் கம்பனியால் செய்யப்பட்ட முதலீட்டின் காலக்கழிவு நட்ட ஏற்பாடுகள் தொடர்பாக குழுத் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டது. | தொடர்புடைய SLFRS மற்றும் LKAS இற்கு இணங்க உருவாக்கப்பட்டது. அத்தகைய ஏற்பாடுகளுக்கு தனித்தனியான அனுமதிகள் பெறப்பட்டிருக்கவில்லை. ஆனால் பணிப்பாளர் சபையினால் நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்பட்ட நேரத்தில், இவ் வகையான சிறப்பு சீராக்கங்கள் பணிப்பாளர் சபைக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்விற்கு தொடர்புடைய ஆவணங்கள் கிடைக்கப்பட வேண்டும். |

## 1.6 பெறப்பட வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறப்பட வேண்டியவைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பட்டியலிடல் முறைமையில் குறிப்பிடப்பட்டுள்ள மொத்த கடன்படடோர் தொகை ரூபா.429,985,332 அல்லது 6 சதவீதமானது 2 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையாக காணப்படுகின்றது. மாகாண சபைகளில் இருந்து பெற வேண்டிய காரணத்தினால் தெரு விளக்கு எரிசக்தி கட்டணங்களில் இருந்து பெறப்பட வேண்டிய ரூபா.388,266,981 தொகையானது அல்லது 90 சதவீதமானது 2 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையாக காணப்படுகின்றது. | கருத்துரை அவதானிக்கப்பட்டது. இம் தெருவிளக்கு கடன்பட்டோரை திறைசேரியில் இருந்து பெற்றுக்கொள்வதற்கு வரிசை அமைச்சு மற்றும் திறைசேரியுடன் கலந்துரையாடப்பட்டது. ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள தெருவிளக்குக் கடனாளிகளுக்கு ரூபா.416 மில்லியன் வழங்கவும் மற்றும் நிலுவையில் உள்ள தெருவிளக்குக் கடனாளிகளுக்கு அறவிடமுடியாக் கடனாக பதியவும் மற்றும் தேவையானவற்றைச் செய்யவும் தேவையான நடவடிக்கைகளை படிப்படியாக எடுக்கவும் அமைச்சகத்திற்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது. | கடன்பட்டோர் நிலுவைகளை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் VAT மற்றும் GST மீளப் பெறப்பட வேண்டிய 1999, 2001 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளுடன் தொடர்புடைய தொகை ரூபா. 12,020,077 ஆனது மீளப்பெறப்படாமல் தொடர்ந்தும் காணப்படுகின்றது. | LECO வரி ஆலோசகர்கள் தலைப்பிடப்பட்ட பணத்தைத் மீளப் பெறுவதற்கு தொடர்ந்து பின்தொடர்கிறார்கள். | ஏனைய தரப்பினரிடமிருந்து நிலுவைத் தொகையை வசூலிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்தபட வேண்டியவை

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 31 திசெம்பர் 2020 இல் நிராகரிக்கப்பட்ட கணக்குகளில் ரூபா.8,075,976 தொகையானது இனங்காணப்படாத வைப்பாக காணப்படுகின்றது. | எழுத்து மூல ஆவணங்களின் கொடுக்கல் வாங்கல்களிலிருந்து நிராகரிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்களாகவுள்ளன. ஆனால் பகுப்பாய்வு செய்து, சம்பந்தப்பட்ட சேகரிப்பு முகவர்களுக்கு சரிசெய்வதற்காக அனுப்பியுள்ளோம், ஆனால் சேகரிப்பு முகவர்களிடமிருந்து எந்த பதிலும் கிடைக்கவில்லை அல்லது தாமதமான பதிலும் கிடைக்கப் பெறவில்லை. எனவே, நுகர்வோரிடமிருந்து வினாக்கள் | பேரேட்டு கணக்குகளில் இணக்கம் செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்களை பதிவழிக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கேட்டும் இந் நிலுவைகளை நிராகரிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல் கணக்கில் வைத்திருப்போம். | |
| (ஆ) | கம்பனி தற்காலிக இணைப்புகளின் வைப்புத் தொகையான ரூபா. 12,335,580 ஆனது வசதி துண்டிக்கப்பட்ட பின்னர் மீளப்பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. மற்றும் இந்நிலுவைகள் நீண்ட காலமாக தொடர்ந்த காணப்படுகின்றது. | • களனி கிளை - தற்காலிக இணைப்பு வைப்புத் தொகையை அவ்வப்போது திருப்பிச் செலுத்துவதற்காக காசோலைகளை எழுதியுள்ளோம். ஆனால், அந்தந்த தரப்பினர்கள் வந்து காசோலைகளை பெற்றுக்கொள்ளவில்லை.<br>• களுத்துறை கிளை<br>1. முறையான ஆவணங்கள் கிடைக்காததால் சில வாடிக்கையாளருக்கு பாதுகாப்பு வைப்புத்தொகை திரும்பப் பெறப்படவில்லை.<br>அ) மாவட்ட செயலாளரின் வேண்டுகோளுக்கு இணங்க ” சுனாமி” முகாமுக்கு தற்காலிக இணைப்புகள் கொடுக்கப்பட்டன .<br>ஆ) பணம் செலுத்தாததால் இணைப்பு துண்டிக்கப்பட்டது<br>2. குறிப்பிட்ட கோப்புகள்/நுகர்வோர் மீதிகள் நிரந்தர இணைப்புகளாக மாற்றப்பட்டவை/வாடிக்கையாளரின் தனிப்பட்ட சிக்கல்கள்/ஏற்கனவே செய்யப்பட்ட பணத்தைத் மீளப்பெறுதல் போன்ற முறைமையில் மாற்றங்களைச் செய்ய வேண்டும். | வைப்புத் தொகையை மீளப்பெற அல்லது வருமானமாக அங்கீகரிக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | களனி கோவிலிருந்து LECO இறுதி வரையான வீதி அமைப்பதற்கு 07 யூன் 2012 ஆம் திகதி வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து ருபா.3,026,458 தொகையானது கம்பனியினால் பெறப்பட்டிருந்தன. | அந்தந்த தரப்பினர்களுக்கு வேலைகளுக்கு பணம் கொடுக்காததால், இன்னும் இவ் வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை. | மூலதனத் செயற்திட்டங்களை தாமதமின்றி முடிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| எவ்வாறாயினும், கணக்காய்வு திகதி வரை கம்பனியினால் இச் செயற்திட்டத்தை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | | |

**1.6.3 முற்பணங்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நீண்ட காலம் நிலுவையாகவுள்ள VAT கொடுப்பனவுத் தொகை ரூபா. 33,427,699 முற்கொடுப்பனவின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது. கணக்காய்வுத் திகதி வரை மேலே கூறப்பட்ட நிலுவைகள் கம்பனியால அறவிடப்படமுடியவில்லை. | LECO வரி ஆலோசகர்கள் தலைப்பிடப்பட்ட பணத்தை மீளப்பெறுவதற்குத் தொடர்ந்து தொடர்கின்றனர். வரி ஆலோசகரினால் வருகின்ற வாரத்தில் பதிவேற்றம் செய்து நினைவூட்டுவதற்கு அனுப்பப்படும் மற்றும் அச் செயற்பாடுகள் தொடர்ச்சியான அவதானிக்கப்படும். | ஏனைய தரப்பினரிடமிருந்து நிலுவைத் தொகையை வசூலிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா. 1,618 மில்லியன் இலாபமொன்றானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான இலாபம் ரூபா. 2,621 மில்லியனாக காணப்பட்டதால் நிதி விளைவுகளில் ரூபா. 1,003 தொகையான பாதகமொன்று அவதானிக்கப்பட்டது. தொற்றுநோய் நிலைமை காரணமாக ஹோட்டல் மற்றும் வணிக கட்டண வகையைப் பொறுத்தவரையில் வருவாய் பாதகமாக குறைவடைந்தமைக்கு காரணமாகும்.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களின் போக்குப்பகுப்பாய்வு

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பீடும் போது மீளாய்வாண்டிற்கான வருவாய் 6 சதவீத்தினால் குறைந்துள்ளது. அதே நேரத்தில் விற்பனை செலவு 10 சதவீதம் குறைந்துள்ளது. அதன் விளைவாக மீளாய்வாண்டின் மொத்த இலாபம் 15 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

(ஆ) மீளாய்வாண்டின் ஏனைய தொழிற்பாட்டு வருமானத்தினை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 66 சதவீதத்தினால் குறைந்துள்ளது. பங்கு இலாப வருமானம் குறைவடைந்தமையே இப் பாதகத்திற்கு பிரதான காரணமாகவுள்ளது.

(இ) மீளாய்வாண்டில் நிதி வருமானத்தினை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 44 சதவீதத்தினால் குறைந்துள்ளது. நிலையான வைப்பு வட்டி குறைவடைந்தமையே இக்குறைவுக்கான பிரதான காரணமாகவுள்ளது.

**2.3 விகிதப் பகுப்பாய்வு**

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பீடும் கம்பனியின் மொத்த இலாப விகிதம் 16 சதவீதத்திலிருந்து 19 சதவீதமாக அதிகரித்துள்ளது. இருப்பினும், தேறிய இலாப எல்லையானது முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த பொழுது 8 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக குறைவடைந்துள்ளது.

(ஆ) உரிமை மீதான திரும்பல் (ஆர்ஓஈ) இனை கடந்த வருடத்துடன் ஒப்பிடும் பொழுது 8 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக குறைவடைந்திருந்தது.

(இ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 3:1 என்றதிலிருந்து 4:1 ஆக அதிகரித்துள்ளது. மின்சாரப் பட்டியலுடன் தொடர்புடைய வியாபார கடன்பட்டோர்கள் அதிகரித்தமையே இவ்வேறுபாட்டுக்கான பிரதான காரணமாகவுள்ளது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 31 திசெம்பர் 2020 இல் அம்பலாங்கொடை , ஜா-எல, மற்றும் கந்தானை ஆகிய இடங்களில் உள்ள நுகர்வோர் சேவை மையங்களின் கட்டடங்களை மீள்மதிப்பீட்டு நட்டங்கள் முறையே ரூபா.3,767,651, ரூபா.234,975 மற்றும் ரூபா. 26,916,683 ஆக காணப்பட்டன. | அம்பலாங்கொட மற்றும் ஜாஎல சிஎஸ்சிகளைப் பொறுத்தவரை, கட்டடக் கிரயத்தில் சில உருப்படிகள் நிலப்பரப்பு, சுவர், நீர் மற்று கழிவு தாங்கிகள் உள்ளடக்கப்பட்டு காணி மதிப்பீட்டின் கீழ் கருதப்பட்டது. ஆனால், கந்தானை CSC தொடர்பாக ஒப்பந்ததாரர் கொடுப்பனவுகள் இன்னும் முடிவு செய்யப்படவில்லை, முடிவடைந்தவுடன் கணக்கை ஆய்வு செய்து மீள்மதிப்பீட்டு மிகை அல்லது நட்டம் கண்டறிந்து கணக்கில் சரியான முறையில் சீராக்கம் செய்வோம். | காணி மற்றும் கட்டடத்தின் கிரயம் சரியாக அங்கீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை மின்சார சபைக்கும் கம்பனிக்கும் இடையில் முறையான மின்சாரம் கொள்வனவு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மின்சார சபைக்கும் கம்பனிக்கும் இடையில் மின்சாரம் கொள்வனவு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 29 சனவரி 2016 ஆம் திகதியில் சபையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. LECO முகாமைத்துவம் 2 பிரச்சினைகளை எடுத்துரைத்துள்ளது. இவ் ஒப்பந்தம் பரிமாற்ற உரிமம் பெற்றவருக்கும் விநியோக உரிமம் | CEB உடன் முறையான ஒப்பந்தம் செய்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பெற்ற LECO இற்கும் இடையே இருக்க வேண்டும், ஆனால் சட்ட ஒப்பந்தத்தில் கையெழுத்திட பரிமாற்று உரிமம் பெற்ற தனி நிறுவனங்கள் காணப்படவில்லை. இலங்கையின் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு உரிமைதாரர்களுக்கிடையில் எரிசக்தி வர்த்தகப் பதிவுகளை அபிவிருத்தி செய்யும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளதுடன், இவ் தேவையை அது நிவர்த்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. | |
| (ஆ) | சூரியககலன் கடன் திட்டத்துடன் தொடர்புடைய தேறிய கணக்கு மற்றும் தேறிய மிகை முறையைப் பயன்படுத்தி மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கு இலங்கை மின்சார சபைக்கும் கம்பனிக்கும் இடையில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | முறையான ஒப்பந்தம் மேற்கொள்ளப்படவில்லை. ஆனால் 24.01.2017 ஆம் திகதியிட்ட PE/TECH/D/6/R1 ஆம் இலக்க கடிதத்தின் அடிப்படையில் 2017/01 ஆம் இலக்க சுற்றறிக்கை எரிசக்தி மீள புதுப்பிப்பதற்கு செய்தோம். கணக்கீட்டின் அடிப்படையை தெளிவாகக் குறிப்பிடுகிறது. | CEB உடன் முறையான ஒப்பந்தம் செய்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | சுய உற்பத்தி கொடுப்பனவுகளுக்கான எந்த விதமான ஒப்பந்தங்களும் இலங்கை மின்சார சபைக்கும் மற்றும் கம்பனிக்குமிடையே மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | முறையான ஒப்பந்தம் மேற்கொள்ளப்படவில்லை. CEB மற்றும் LECO இரண்டையும் அவதானிக்காத ஒழுங்குமுறை ஆணையத்தின் அறிவுறுத்தலாகும். | CEB உடன் முறையான ஒப்பந்தம் செய்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | களனி, நுகேகொட மற்றும் மொரட்டுவ கிளைகளில் 9 வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட ரூபா. 1,326,946 பெறுமதியான 11 காசோலைகளும் வங்கியினால் மறுக்கப்பட்ட்ன. கம்பனி அவ் நிலுவைகளை மீளப் பெறுவதற்கு தேவையான எந்தவிதமான நடவடிக்கைகயையும் மேற்கொள்ளவில்லை. | பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆவையாவன<br>• சில கணக்குகளில் சேவை இணைப்பு அகற்றப்பட்டது. மின்சார வழங்கல் துண்டிக்கப்பட்டது.<br>• தீர்ப்பனவு செய்யக் கோரி கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.<br>• கோரிக்கை கடிதங்கள் வழங்கப்பட்டது.<br>• மேலதிக நடவடிக்கைக்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு கோவைகள் அனுப்பப்பட்டது. | வாடிக்கையாளர்களிடமிருந்து நிலுவைத் தொகையை வசூலிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | • மத்தியஸ்த குழுவிடம் புகார் கொடுக்கப்பட்டது.<br><br>• ஒரு காவல்துறை முறைப்பாடு கொடுக்கப்பட்டது. | |
| (உ) | லங்கா எலெக்ட்ரிசிட்டி கம்பனி (பிரைவேட்) லிமிட்டெட்டினால் கொள்வனவு செய்யப்பட்ட காணியில் இலங்கை மின்சார சபை ஆரம்ப உப மின் நிலையங்களை நிர்மாணித்திருந்தது மற்றும் 31 திசெம்பர் 2020 இல் கம்பனியினால் ரூபா. 206,610,712 பெறுமதியான கிரயம் காணிெ கட்டடத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. காணிகளின் பெறுமதி வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகளில் அங்கீகரிக்கப்பட்டது. மேலும், மேற்படி செயற்திட்டங்கள் தொடர்பாக கம்பனிக்கும் இலங்கை மின்சார சபைக்கும் இடையில் முறையான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | துணை மின்நிலையம் அமைக்க LECO இனால் காணி கையகப்படுத்தப்பட்டது. கட்டடத்தை அமைக்க ADB இனால் மானியக் கடன் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் CEB க்கு கடன் வழங்கப்பட்டு CEB கட்டுமானங்களை செய்தது. காணியின் உரிமை LECO விடம் காணப்பட்டது. CEBஆல் கட்டுமானங்கள் அமைக்கப்பட்டன. கணக்காய்வாளரின் அறிவுறுத்தலுக்கமைய, 2015 இற்கு முன்னரிருந்து எங்களுடைய சொத்துகளின் கீழ் காட்டப்பட்டது, இவை பெறப்பட வேண்டியவையாக மாற்றப்பட்டது, இப் பெறுமதிகள் CEB இலிருந்து அறவிட்டுக்கொள்ளப்பட வேண்டும், இவை வியாபார மற்றும் ஏனைய கடன்பட்டோராக வெளிப்படுத்தப்பட்டது. | காணி மதிப்பீடானது முறையாக கணக்கீடப்பட்டது மற்றும் நிதிக்கூற்றில் நியாயமாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | இலங்கை மின்சார சபையின் முதன்மை உப நிலையம் அமைந்துள்ள (நாவல) 52.5 பேர்சசஸ் (Lot W) காணியுடன் தொடர்புடைய 6 பேர்ச்சஸ் காணி மற்றும் 14.55 பேர்ச்சஸ் காணி உரிமை கோரி கொழும்பு மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. குறித்த 6 பேர்ச்சஸ் காணியை வழங்குமாறு 2013 மார்ச் 04 ஆம் திகதி நீதிமன்றத்தினால் உத்தரவு வழங்கப்பட்டது. குறித்த தீர்மானத்திற்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் கம்பனியால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, வழக்கை மீளபெறுமாறு சட்டமா அதிபரினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. 6பேர்ச்சஸ் காணியை வழங்கவும் மற்றும் வீதியின் வலதுபுறத்தில் ஒரு தீர்வை அடையும். நிதிக்கூற்றில் இவ் வழக்கு தொடர்பாக எந்த வெளிப்பாடும் அல்லது சீராக்கலும் | இவை நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்படவில்லை. எவ்வாறாயினும், LECO வின் நிதிக்சூற்றில் நிதி இழப்பு தொடர்பாக கணக்கில் காட்டப்படவில்லை. ஏனெனில் இது தொடர்பாக சட்டமா அதிபரின் முடிவை ஏற்றுக்கொள்ளும் பணிப்பாளர் சபையிடமிருந்து முறையான அங்கீகரிக்கப்பட்ட தீர்வுகள் பெறப்படவில்லை. | தேவையான வெளிப்பாடுகள் நிதிக்கூற்றில் காட்டப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்படவில்லை. அதற்கு மேலதிகமாக மேற்படி 6 பேர்ச்சஸ் காணியின் கொள்வனவு விலையான ரூபா.11,664,122 இனால் [(102,061,068/52.50)*6] கம்பனிக்கு நட்டம் எற்பட்டுள்ளது. | | |
| (எ) | நிதிக்கூற்றின் படி, 31 திசெம்பர் 2020 இல் நிலையான சொத்துக்களின் மொத்த பெறுமதி ரூபா. 13,675 மில்லியனாகும். இருப்பினும், கம்பனியின் ஆதனம் , பொறி, இயந்திர மற்றும் உபகரணங்கள் காப்புறுதி செய்யப்பட்டிருக்கவில்லை. 31 திசெம்பர் 2020 இல் அண்ணளவாக புத்தகப் பெறுமதி ரூபா.243 மில்லியனாக இருந்ததுடன் மோட்டார் வாகனங்களின் பெறுமதியை ஈடுசெய்வதற்கு மட்டுமே காப்பீட்டு கொள்கை பெறப்பட்டிருந்தது. மேலதிகமாக நிலையான சொத்துக்களுக்கும் இருப்புக்களின் பெறுமதி ரூபா.2,805 மில்லியனுக்கும் 31 திசெம்பர் 2020 வரை காப்புறுதி செய்யப்பட்டிருக்கவில்லை. | PPE பெரும்பாலும் விநியோக முறைமையில் சொத்துக்களை உள்ளடக்கியதுடன் அவற்றின' பெறுமதி மிக அதிகமாக காணப்படுகின்றது. ஆனால் நடைமுறையில் அனைத்து சொத்துக்களுக்கும் காப்பீடு செய்யப்படுவது நடைமுறையில காணப்படவில்லை. PPE இனது அண்ணளவான பெறுமதி ரூபா.13,675 மில்லியனாகும். இச்சொத்துக்களின் விநியோக முறைமை சொத்துக்கள், வாகனம், காணி மற்றும் கட்டடங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்துதல்கள் போன்றவை புவியியல் ரீதியாக 395.77 கிலோமீற்றர் பரப்பளவில் உள்ளன மற்றும் ஒரு பகுதியில் உள்ள சொத்துகளுடன் ஒப்பிடும் போது இழப்பு குறைவாக உள்ளது. இருப்புக்க்ள் மற்றும் கட்டடங்களைத் தவிர ஏனைய PPEஇற்கான காப்பீட்டினை பெறுவது நடைமுறைக்கு சாத்தியமற்று காணப்பட்டது. | நிலையான சொத்துக்களை பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | இல.508, அல்விட்டிகல வீதி, நாரஹேன்பிட்டில் அமைந்துள்ள 73.7 பேர்ச்சஸ் காணியானது ரூபா.53,432,500 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தும். 2001 ஆம் ஆண்டில் தலைமை அலுவலகக் கட்டடத்தை நிர்மாணிப்பதற்காக, மீளாய்வாண்டின் இறுதி வரை கட்டுமான வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை.<br>ஆலோசனைக் கட்டணங்கள் உட்பட இது சம்பந்தமாகச் செய்யப்பட்ட செலவினங்கள் மூலதனவேலை குறைவேலைக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளன. | தலைமை அலுவலகக் கட்டிடம் கட்டுவதற்கான பெறுகைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டது. தற்போது பெறுகை செயல்முறை நிறைவடைந்து வழங்குவதற்காக காத்திருக்கிறது. இந்த ஆண்டுக்குள் கட்டுமான வேலையை தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது | கட்டுமான வேலைகளை தாமதமின்றி முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஐ) | களனி, கோட்டை ஆகிய இடங்களில் கிளை அலுவலகங்களையும், தலுகம, வத்தளை, நீர்கொழும்பு, நுகேகொட ஆகிய இடங்களில் | இவ் வருடத்தில் தலுகம, நீர்கொழும்பு மற்றும் நுகேகொட போன்ற சி.எஸ்.சி இற்கான பெறுகை மற்றும் கட்டுமான | கட்டுமான வேலைகள் தாமதமின்றி நிறைவடைய நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | வாடிக்கையாளர் சேவை நிலையங்களையும், பயாகலை மற்றும் பாணந்துறையில் வாடிக்கையாளர் சேவை நிலையங்களின் தங்குமிடம் நிர்மாணிப்பதற்காக 2001, 2000, 2015, 1994, 2018, 2001, மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளில் முறையே காணிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. கணக்காய்வு திகதி வரை கட்டுமான வேலைகள் தொடங்கப்படவில்லை. | அமைப்பதற்கு தொடங்கப்படவிருக்கின்றன. களனி மற்றும் கோட்டை கிளை அலுவலக நிர்மாண வேலைகள் அடுத்த வருடம் ஆரம்பிக்கப்படவுள்ளன. | மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஒ) | வத்தளையில் வாடிக்கையாளர் சேவை நிலையத்தை நிர்மாணிப்பதற்காக 1994 ஆம் ஆண்டு 99 வருட குத்தகை அடிப்படையில் நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து அமைச்சரவை அனுமதியுடன் காணி பெற்றுக்கொள்ளப்பட்டது. கம்பனியால் அக்காணியில் அபிவிருத்தியுடன் தொடர்புடைய எந்தவித நடவடிக்கைகள் தொடப்படவுமில்லை மற்றும் கூறப்பட்ட கட்டடங்கள் அமைக்க முடியாமையினால் 2003 ஆகஸ்ட் 20 ஆம் திகதி நகர அபிவிருத்தி அதிகார சபையினால் மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டது. மேலும், 1997 இல் இக்காணியின் மொத்தப் பெறுமதி ரூபா. 3,099,000 ஆனது கம்பனியினால் உள்ளடக்கப்பட்டிருந்துடன் சில்லறைக் கடன்பட்டோராக பதிவு செய்யப்பட்டது எவ்வாறாயினும், இம் முதலீட்டினால் எந்தவிதமான நிதி நன்மை அல்லது ஏனைய நன்மைகள் பெறப்பட்டிருக்கவில்லை. அதை மீளப் பெற்றுக்கொள்வதற்கு போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. மேலும், திட்டமிட்டபடி CSC இனை அமைப்பதற்கு கம்பனி தவறியமையால் அந்தந்த அலுவலக கட்டிடங்கள் வாடகை அடிப்படையில் பெறப்பட்டு செயற்பட்டு வருகின்றன. | பதிவுகளை கணக்காய்வு அவதானித்ததுடன் கம்பனி கம்பங்களை களஞ்சியப்படுத்தல் போன்ற பல்வேறு தொழிற்பாட்டு நோக்கங்களுக்காக காணிகளை கம்பனி பயன்படுத்தியுள்ளது. இக் காலகட்டத்தில் கம்பனி இனங்காணப்படாத காரணங்களால் கட்டுமான வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை. பொருளாதார நன்மையாக ரூபா. 3,099,000 தொகையானது காணியின் மூலம் பெறப்பட்டிருந்தது. இக் காலப்பகுதியில் பதிவுகள் எதுவும் கிடைக்கப்பெறாததினால் உறுதிப்படுத்த முடியவில்லை. CSC இன் விரைவாக கட்டுமானத்திற்கான அனைத்து பொறுப்புள்ள அதிகாரிகளும் வழங்க எந்தவித தகவலைகளும் கிடைக்கப் பெறவில்லை. ரூபா.3,099,000 பெறுமதியான கிரயம் பதிவழிபபு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | கம்பனியின் வளங்கள் கம்பனியின் அதிகபட்ச நன்மைகளுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஓ) | திட்டமிட்டபடி அலுவலக கட்டிடங்கள் நிர்மாணிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படாததால், பெரும்பாலான அலுவலகங்கள் நீண்ட கால அடிப்படையில் வாடகை கட்டிடங்களில் தொழிற்பட்டு வருகின்றன. இதன் விளைவாக, கம்பனியால் அலுவலக வாடகைக்கு | அனைத்து வாடகைகளும் ஆண்டுதோறும் அல்லது இரு வருடத்திற்கு ஒருமுறை நீடிக்கப்படும். கட்டுமான வேலைகள் நிறைவடைந்தவுடன், புதிய வளாகத்திற்கு செயற்பாடுகள் முறையாக மாற்றப்படும். கந்தானை | செலவினங்களை வினைத்திறனுடன் முகாமை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | அதிகளவு செலவிடபபட்டிருந்தது. அதன்படி, மீளாய்வாண்டில் அலுவலக வாடகை ருபா.71,429,500 ஆன தொகை காணப்படுகின்றது. | CSC அமைக்கப்பட்டு ஏற்கனவே மாற்றப்பட்டுள்ளது. | |
| (l) | 02 மார்ச் 2020 ஆம் திகதியில் இலங்கை மின்சார சபைக்கு ரூபா.2,000,000,000 தொகையான கடன் முறையான ஒப்பந்தங்கள் இலங்கை மின்சார சபையுடன் மேற்கொள்ளாது கம்பனியால் வழங்கப்பட்டிருந்தது. மேலும், கணக்காய்வுத் திகதி வரை மேற்கூறிய கடனின் எந்த தவணைக்கட்டணமும் கம்பனியால் பெறப்பட்டிருக்கவில்லை. | அவ் நேரத்தில் CEB இன் திரவத்தன்மை பிரச்சனையை சமாளிக்க பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் இக் கடன் வழங்கப்பட்டது. LECO இன் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் வரைவு ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டது. எவ்வாறாயினும், சில விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மாற்றுமாறு CEB இனால் கோரப்பட்டது. எனவே, சபையின் அனுமதி மற்றும் பரிந்துரைகள் தேவைப்பட்டன. 2021 மே இறுதியில் நடைபெறும் அடுத்த சபைக் கூட்டத்தில் சபையின் மீளாய்வு மற்றும் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படும். | CEBஉடன் முறையான ஒப்பந்தம் செய்து கொள்ள சரியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.3 தொழிற்பாட்டு செயற்திறனின்மை**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய சேமிப்பு வங்கிக்கும் கம்பனிக்கும் இடையேயான சூரிய மின்சக்தி கடன் ஒப்பந்தத்தில் வட்டி செலுத்தும் திகதி மற்றும் வட்டிக் கணிப்பீட்டின் அடிப்படையில் தொகை ஆகியவை தெளிவாக குறிப்பிடப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஒப்பந்தத்தின்படி, NSB அதிகாரியுடன் ஒரு கூட்டம் நடைபெற்றது போது எந்தவிதமான தெளிவும் காணப்படவில்லை. அவர்கள் குறிப்பிட்ட பணம் செலுத்தும் திகதி உட்பட ஒப்பந்தத்தில் திருத்தம் செய்ய ஏற்றுக் கொண்டனர். | அனைத்து ஒப்பந்தங்களிலும் தேவையான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை தெளிவாக உள்ளடக்கப்பட்டுள்ளதா என அவதானம் செலுத்தப்பட வேண்டும். |

**3.4 பெறுகை முகாமைத்துவம்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முதன்மை பெறுகைத் திட்டம் தொடர்ந்து பதிவேற்றப்பட்டிருக்கவுமில்லை மற்றும் முன்னேற்றத்தை மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | மாதந்தோறும் பதிவுசெய்யப்பட்ட தொகைகள் சரிபார்க்கப்பட்டு, அதன்படி பெறுகைகள் தொடங்கப்படுகிறது. கணக்காய்வாளர்களின அவதானிப்புகளைக் குறிப்பிட்டு, கணக்காய்வாளரால் அவதானிக்கப்பட்ட MPP ஆறு மாதங்களில் பதிவேற்றப்படும். | பெறுகை வழிகாட்டுதலுள்ள ஏற்பாடுகளின் படி, முதன்மை பெறுகைத் திட்டம் ஆறு மாத கால இடைவெளியில் நீடிக்காமல் தொடர்ந்து பதிவேற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | முதன்மை பெறுகை திட்டத்தில் நியாயமான இருப்பு பொருட்கள் மற்றும் எழுதுபொருட்கள் மட்டுமே உள்ளடக்கப்பட்டுள்ளது. வேலைகளுக்கான பெறுகை, ஆலோசனை சேவைகள் உள்ளிட்ட சேவைகள் திட்டத்தில உள்ளக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தில் அங்கீகரிக்கப்படாத நேரத்தில், பெறுகைத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டது. எனவே, சில பொருட்கள் பெறுகைத திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. கணக்காய்வாளரின் அவதானிப்புக்கள் எதிர்கால பெறுகைத் திட்டங்களை தயாரிப்பதில் குறிப்பிடப்பட்டுள்ளது. | அனைத்து பெறுகை நடவடிக்கைகளும் முதன்மை பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (இ) | திட்டத்தின் முன்னேற்றத்தை புதுப்பிக்க சரியான வழிமுறையில்லை, இதன் விளைவாக, ஒரு குறிப்பிட்ட திகதியில் பெறுகை முன்னேற்றத்தை தனித்தனியாக அடையாளம் காண்பது கடினமாக காணப்பட்டிருந்தது. | ஒரு புதிய முன்னேற்ற கண்காணிப்பு முறைமை (இணைய அடிப்படையிலான பயன்பாடு) ஒரு முன்னோடி திட்டமாக உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது. | பெறுகை நடவடிக்கைகளில் முன்னேற்றம் குறித்து தொடர்ந்து ஆய்வு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | முதன்மை பெறுகைத் திட்டத்தின்படி, 2020 இன் செயல்திட்டத்தில் 6 பெறுகைகள் மட்டுமே உள்ளடக்கப்பட்டுள்ளது. இருப்பினும், செயற்திட்டத்திற்கும் பெறுகைத் திட்டத்திற்கும் சரியான தொடர்பு காணப்படவில்லை. | செயல்திட்டத்தில் உள்ள அனைத்து பொருட்களும் பெறுகைத்திட்டத்துடன் இணைக்கப்படவில்லை, ஏனெனில் செயல்திட்டத்தில் உள்ள உருப்படிகள் கிடைக்கக்கூடிய வளங்களைப் பயன்படுத்தி உள்ளக அபிவிருத்தியுடன் இணைக்கப்பட்டுள்ளன. MPP இன் எதிர்காலத் தயாரிப்பிற்காக கணக்காய்வாளரின் அவதானிப்பு குறிப்பிடப்பட்டுள்ளது. | செயல் திட்டத்திற்கும் பெறுகைத் திட்டத்திற்கும் இடையே சரியான இணைப்பு காணப்பட வேண்டும். |

### 3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பீஈடி/12 சுற்றறிக்கையின் பிரிவு 9.3 - நல்லாளுகை பொது முயற்சி வழிகாட்டுதல்களின் படி ஒவ்வொரு பதவிக்கும் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுக்கான திட்டத்தை கம்பனி உருவாக்கியிருக்கவில்லை. | கம்பனி நிர்வாகமற்ற ஊழியர்களுக்கான ஆட்சேர்ப்புத் திட்டத்தையும், ஒவ்வொரு வகை நிர்வாகப் பணியாளர்களுக்கான ஆட்சேர்ப்புத் திட்டத்தையும் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆனால். பொது முயற்சிகள் திணைக்களமானது அரசுக்கு சொந்தமான கம்பனிகளுக்கான வழிகாட்டுதல்களை இன்னும் தயாரித்து வருவதால், திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களித்திடமிருந்து (MSD) கம்பனியினால் அனுமதி | தொடர்புடைய வழிகாட்டுதல்கள் மற்றும் சுற்றறிக்கைகளுடன் இணங்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பெறப்பட்டிருக்கவில்லை. இவ் வழிகாட்டுதல்களை வழங்கிய பின்னர், அனைத்து ஆட்சேர்ப்பு திட்டத்தையும் தயார் செய்யுமாறு அவர்கள் ஏற்கனவே எங்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர். | |
| (ஆ) | பீஈடி /12 சுற்றறிக்கையின் பிரிவு 9.2 இன் படி, பொதுத் திறைசேரியின் பொது முயற்சி திணைக்களத்துடன் பதிவுசெய்யப்பட்ட நிறுவனக்கட்டமைப்பு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணினர் கம்பனியினால் தயாரித்து பராமரிக்கப்படவில்லை. | கம்பனியின் நிறுவன கட்டமைப்பு மற்றும் பதவியணியினர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது. ஆனால் 17 ஓக்டோபர் 2019 ஆம் திகதியில் அவர்களினால் வழங்கிய அறிவுறுத்தலின்படி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. | தொடர்புடைய வழிகாட்டுதல்கள் மற்றும் சுற்றறிக்கைகளுடன் இணங்கப்பட வேண்டும். |
| (இ) | நடைமுறைகளின் கையேடு (மனித வள முகாமைத்துவம் தொடர்பான விடயங்கள்) பீஈடி/12 சுற்றறிக்கையின் பிரிவு 9.14 இன் அடிப்படையில் கம்பனி ஒரு நடைமுறைக் கையேட்டைத் தயாரிக்கவில்லை. | 1990 ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தனிப்பட்ட கொள்கை வழிகாட்டுதல்களைக் கம்பனி கொண்டுள்ளது, ஆனால் அது மதிப்பாய்வு செய்யப்பட்டு புதுப்பிக்கப்பட வேண்டும், எனவே இச் செயல்பாடு ஏற்கனவே 2021 ஆம் ஆண்டிற்கான மனித வள மற்றும் நிர்வாகப் பிரிவின் செயல் திட்டம் மற்றும் பெறுகை செயல்முறையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. தகுந்த ஆலோசகரைத் தேர்ந்தெடுப்பதற்கான செயற்பாடு ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளது. இச் செயல்பாடு 2021 ஆம் ஆண்டுக்குள் நிறைவேற்றப்படவுள்ளது. | தொடர்புடைய வழிகாட்டுதல்கள் மற்றும் சுற்றறிக்கைகளுடன் இணங்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் நிர்வாக அலுவலர், உதவிக் கணக்காளர், போக்குவரத்து நிர்வாகி மற்றும் பயிற்சி நிர்வாகி ஆகிய பதவிகளுக்கு எட்டு உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர். எவ்வாறாயினும், அந்தந்த நிறுவனங்களில் இருந்து தகுதிகள் மற்றும் பணி அனுபவம் தொடர்பாக விண்ணப்பதாரர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் நியாயமானதும் மற்றும் நம்பகத்தன்மையை சரிபார்க்க சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | அனைத்து சேவை சன்றிதழ்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய ஆவணங்களை அந்தந்த பணியிடங்களுக்கு அனுப்புவதற்கும், நியமனத்தை உறுதி செய்வதற்கு முன் அவற்றின் துல்லியத்தை சரிபார்க்க தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் அவதானிக்கப்பட்டது. விண்ணப்பதாரரால் சான்றளிக்கப்பட்ட ஏனைய ஆவணங்களின் நகல்களின் உண்மைத்தன்மையை ஆட்சேர்ப்பின் போது மூலப் பிரதிகளை அவதானிப்பதன் மூலம் உறுதிப்படுத்தவும் குறிப்பிடப்பட்டுள்ளது. | ஆவணங்களின் உண்மைத் தன்மையானது சரிபார்க்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | நிர்வாக அதிகாரி பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யும் போது, தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரி 26 நவம்பர் 2009 முதல் 08 மே 2015 வரை 5 ஆண்டுகள் நிதிக் கம்பனியில் முகாமைத்துவ உதவியாளராக பணிபுரிந்துள்ளர். இருப்பினும், தொடர்புடைய நிதி கம்பனி வழங்கிய தகவல்களின் படி, மேற்கூறிய நபருக்கு சம்பந்தப்பட்ட துறையில் அனுபவமில்லை என்பது தெரிய வந்தது. அந்த கால கட்டத்தில், அவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டபீடத்தில் இளங்கலை பட்டதாரியாக இருந்தார். இதன்படி, அவர் சமர்ப்பித்த சேவை சான்றிதழ் போலியான ஆவணமாக இருக்கலாம் என மேலும் அவதானிக்கப்பட்டது. | இது தொடர்பாக ஆரம்பகட்ட விசாரணை தொடங்கியுள்ளது. | ஆவணங்களின் உண்மைத் தன்மையானது சரிபார்க்கப்பட வேண்டும். |
| (ஊ) | உதவிக் கணக்காளர் ஆட்சேர்ப்பு தொடர்பாக, 21 செப்டம்பர் 2020 வரை கம்பனிக்கு 1,382 விண்ணப்பங்கள் பெறப்பட்டன, அவற்றில் முதல் 325 விண்ணப்பங்கள் மட்டுமே தேர்வுக்கு பரிசீலிக்கப்பட்டன. மேலும், வேறு எந்த நியாயமான காரணங்களும் இல்லாமல், மீதமுள்ள 1057 விண்ணப்பங்கள் ஆட்சேர்ப்பு செயல்முறைக்கு மதிப்பீடு செய்யப்படவில்லை. | உதவிக் கணகப்காளர் பதவிக்கு ஏறக்குறைய 1,350 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளதால், அத் தேர்வுப் பட்டியலுக்கு தெரிவு செய்ய கணிசமான நேரம் செலவழிக்கப்பட்டு, மீதமுள்ள விண்ணப்பங்களை பட்டியலிடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பொருத்தமான பதவிகளுக்கு மிகவும் பொருத்தமான நபர்கள் நியமிக்கப்பட வேண்டும் |
| (எ) | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் நிதிப் பிரிவின் மீள்சீரமைப்பின் கீழ் உதவிக் கணக்காளர் பதவி வெற்றிடத்தை நிரந்தர அடிப்படையில் நிரப்ப திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 09 திசெம்பர் 2020 மற்றும் 12 சனவரி 2021 ஆகிய திகதிகளில் மூன்று விண்ணப்பதாரர்கள் இந்த பதவிக்கு தற்காலிக அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர். தகுதியான ஏராளமான விண்ணப்பதாரர்கள் அந்த பதவிக்கு விண்ணப்பித்திருந்தனர்.<br>எவ்வாறாயினும், கணக்காய்வு திகதி வரை நிரந்தர அடிப்படையில் அந்தப் பதவி வெற்றிங்களை நிரப்ப எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | தேவையான ஆளணிப் பற்றாக்குறையால் நிதிப் பிரிவில் நிலவும் கடும் நெருக்கடிக்கு மாற்றுத் தீர்வாக, உதவிக் கணக்காளர் பதவிக்கு தற்காலிக அடிப்படையில் பணியாளர்களை நியமிக்க முகாமையானது தீர்மான மேற்கொண்டுள்ளது. நிரந்தர அடிப்படையில் விண்ணப்பதாரர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்காணல்கள், இறுதிப்பட்டியல் முடிந்தவுடன் விரைவில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. | நிரந்தரமான அடிப்படையின் மீதான அவ் பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | மேலும், மேற்கூறிய நபர்களின் விண்ணப்பங்கள் நேரடியாக கம்பனித் தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட்டு, சாதாரண அடிப்படையில் உதவிக் கணக்காளர் பதவிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கு அவர்களை பரிசீலிக்குமாறு மனிதவளத் தலைவருக்குஅவர் அறிவுறுத்தினார். அதன்படி, சிரேஸ்ட நிதி அதிகாரி, கம்பனியின் தற்போதைய ஆட்சேர்ப்பு நடைமுறையின் படி நேர்காணல்களை மேற்கொண்டார், மேலும் விண்ணப்பதாரர்களை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் சாதாரண அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்ய பரிந்துரைக்கப்பட்டிருந்தன. இருப்பினும், ஆட்சேர்ப்பு செயல்முறை தொடர்பான சான்றாதாரங்கள் கணக்காய்விற்கு கிடைக்கப்பட்டிருக்கவில்லை. | இது ஒரு தற்காலிக ஆட்சேர்ப்பு என்பதால், முறையான நேர்காணல் நடத்தப்பட்டிருக்கவில்லை மற்றும் விண்ணப்பதாரரை சம்பந்தப்பட்ட பிரிவிற்கு அனுப்பி, அந்தந்த பதவியில் பணிபுரியும் அவரது திறனை மதிப்பீடு செய்த பின்னர் பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன. | கம்பனிக்கு பொருத்தமான பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதில் முறையான முறைமையை உருவாக்க வேண்டும். |
| (ஐ) | செய்தித்தாள் விளம்பரத்தின படி, மேலே குறிப்பிடப்பட்ட 3 ஆட்சேர்ப்பு விண்ணப்பதாரர்களில் விண்ணப்பதாரர் இல. 103 2020 திசெம்பர் 01 ஆம் திகதியில் நேரடியாக விண்ணப்பம் தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. (இரண்டாவது தடவையாக) மேலும் 16 செப்ரெம்பர் 2020 ஆம் திகதி விண்ணப்பதாரியினால் (முதலாவது விண்ணப்பம்) சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இருப்பினும், விண்ணப்பதாரின் வேலை அனுபவக்காலம் தொடர்பில் முதல் முறையாக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்திற்கும், இரண்டாவது முறை சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்திற்கும் இடையே வேறுபாடுகள் காணப்பட்டன. இரண்டாவது விண்ணப்பத்தின் படி, விண்ணப்பதாரர் பொது பேரேடு மற்றும் கடன் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் கணினி அடிப்படையிலான கணக்கீட்டு முறைமையுடன் தேவையான வேலை அனுபவம் பெற்றிருக்கவில்லை, மேலும் அவர் ஒரு தனியார் கம்பனியில் வாடிக்கையாளர் சேவை அதிகாரியாக ஒரு வருட அனுபவம் மட்டுமே பெற்றிருந்தார். கூறப்பட்ட தகுதியின்மைகள் இருந்தபோதிலும், அவள் அமைய அடிப்படையில் பணியமர்த்தப்பட்டாள். | தற்காலிக ஆட்சேர்ப்பு தொடர்பாக விண்ணப்பதாரர்கள் வழங்கிய சான்றிதழ்களின் துல்லியம் சரிபார்ப்பு செய்யப்படுவதில்லை. ஆனால் நிரந்தர அடிப்படையில் நடைபெறும் ஆட்சேர்ப்புகளில் சான்றிதழ்களின் துல்லியம் சரிபார்த்த பின்னரே நியமனங்கள் உறுதி செய்யப்படுகின்றன. | கம்பனிக்கு பொருத்தமான பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு முறையான ஆட்சேர்ப்பு நடைமுறையை உருவாக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | வேலை விபரம் மற்றும் போக்குவரத்து நிர்வாகி மற்றும் பயிற்சி நிர்வாகி பதவிக்கு அங்கீகரிக்கப்பட்ட வேலைப்பட்டியல் ஆகியவை கணக்காய்விற்கு கிடைக்கவில்லை. | தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அவதானிப்பு குறிப்பிடப்பட்டுள்ளது. | வேலை விபரங்கள் மற்றும் கடமை பட்டியல்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுகை தாமதம் காரணமாக வருடாந்த செயல்பாட்டு திட்டத்தில் திட்டமிட்டபடி LBS ஆட்டோமேஷன், ∴பீடர் எண்ட் வோல்டேஜ் கண்காணிப்பு, தெரு விளக்கு கட்டுப்பாடுகள் போன்ற சில செயல்பாடுகளை கம்பனியால் நிறைவேற்ற முடியவில்லை. | கோவிட்-19 சூழ்நிலையில், பெறுகை நடவடிக்கைகள் 2020 இல் தொடங்கப்பட்டாலும், அனைத்து பெறுகைகள் மற்றும் வழங்கல்கள் தாமதமாகி காணப்பட்டன. கட்டளையிடப்பட்ட பொருட்களின் பற்றுச்சீட்டு இந்த நடவடிக்கைகள் 2021 ஆம் ஆண்டுக்கு அனுப்பப்பட்டன. | திட்டமிட்ட படி இலக்குகளை அடைய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கம்பனியின் தொழில்நுட்ப சாத்தியக்கூறுகள், நிலை மற்றும் தேவைகள் ஆகியவற்றுடன் பொருந்தாத காரணத்தால் மூடப்பட்ட ஒப்பந்தகாரரின் -பைலட் திட்டம், ISO 9000 செயல்படுத்தல் போன்ற செயல் திட்டத்தில் உள்ளடங்கிய சில நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட அல்லது இரத்துசெய்யப்பட வேண்டும். | அவதானிப்பு குறிப்பிடப்பட்டுள்ளது | கம்பனியின் நோக்கங்களுக்கு ஏற்ப அடையக்கூடிய இலக்குகள் அமைக்கப்பட வேண்டும் |